

# “பியகம மற்றும் பத்துப்பிட்டிவல சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் தமிழ் தொழிலாளர்களினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பான சுருக்க அறிக்கை”

**ஆய்வினை நடத்துவோர்** : சிரம அபிமானி கேந்திரய

**காலப்பகுதி** : 10 மே 2021 - 20 ஜூலை 2021 வரை
(நாட்டில் ஏற்பட்ட திடீர் முடக்கநிலை காரணமாக ஆய்வானது 02.10. 2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது)

**ஆய்வாளர்** : மங்களேஸ்வரி ஷங்கர்

## i.Acronyms

| | |
|---|---|
| BOI | Board of Investment |
| FTZ | Free Trade Zone |
| OT | Over Time |
| EPF | Employees Provident Fund |
| ETF | Employees Trust Fund |

## ii.Acknowledgement

“பியகம மற்றும் பத்துப்பிட்டிவல சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் தமிழ் தொழிலாளர்களினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பான சுருக்க ஆய்வு அறிக்கைக்கு உதவி ஒத்தாசைகள் வழங்கிய சிரமஅபிமானி கேந்திரய நிலையத்தில் திட்டமிடல் இணைப்பாளர் சுகத் ராஜபக்ச திட்ட உதவி உத்தியோகத்தர் ரொஷானி மற்றும் நேரடியாக கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட சுதந்திர வர்த்தக வலையத்தில் வேலை செய்யும் அல்லது ஏற்கனவே வேலை செய்து விலகிய தொழிலாளர்கள்இ சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பின் அதிகாரிஇ சுதந்திர வர்த்தக வலையத்தில் சட்ட உத்தியோகத்தர்இ சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு நன்றி அறிதலை தெரிவிப்பதுடன் ஏற்கனவே இதுபோன்ற ஆய்வு சுருக்க அறிக்கையினை தயாரித்தது இப்போதைய நிலை பற்றி தன்னுடைய கருத்துகளை வழங்கிய சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**Table of Content**


01.Introduction அறிமுகம் 5

02.Context 7

03.Methodology முறைமை 8

04.Constrains and Limitations of Research மட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும் 10

05. Study Findings கற்கையினால் பெறப்பட்ட அடைவுகள் 11

- 1.தொழிலாளர்களது தனிப்பட்ட விவரங்கள் 11
- 2.கல்வியின் நிலை 15
- 3.சுதந்திர வர்த்தக வலய வேலைவாய்ப்பு 17
- 4.தங்குமிட வசதி 21
- 5.செலவுகள் 23
- 6.சிங்கள மொழியறிவு 23
- 7.தொழில் தொடர்பாக 25
- 8.மனிதவலு தொழில் தொடர்பாக 25

06.Recommendations and conclusions 25

07.References 27

08.Appendices 27

## iii.Executive summary

நிறைவேற்று சுருக்கம் சிரம அபிமானி கேந்திர அமைப்பானது வெளிமாவட்டங்களில் இருந்து சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் இடம்பெயர் நலிவுற்ற தொழிலாளர்களுடன் இணைந்து அவர்களது தொழில் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்களது தொழில் மற்றும் மனித உரிமையை நிலைநாட்டுவதற்காகவும் பணிபுரிகிறது.

குறிப்பாக வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பு வந்து சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழில் தேடி வந்துள்ள தமிழ் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றிய தற்கால நிலை பற்றிய சூழ்நிலை அறிக்கையொன்றை பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது

இந்த அறிக்கையினை தயாரிப்பதற்கான குறிப்பான நோக்கங்களாக வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் தொழிலாளர்கள் சுதந்திர வர்த்தக வலையத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் உரிமைசார் செயற்பாடுகள் மற்றும் தொழில் உரிமை சட்டம்இ மொழி உரிமை தொடர்பாக சட்ட அமுலாக்கல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்றவைகளை அடையாளப்படுத்துதல் என்பனவாகும்.

குறித்த சூழ்நிலை அறிக்கையானது குறிப்பாக எண்ணிக்கை அடிப்படையிலும் பண்பறி பகுப்பாய்வு (Qantitative and Qualitative) அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது.

2021 மே மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாத காலப் பகுதிகளில் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. குறிப்பாக நிகழ்நிலை கலந்துரையாடல் ஊடாகவும் (ணுழழஅ) தொழிலாளிகளிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்து (ஞரநளவழைnnயசைந) ஊடாகவும் ஏற்கனவே ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் நூல்களில் (Reports and Research) பெறப்பட்ட தகவல்கள் சிவில் அமைப்புக்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பு சுதந்திர வர்த்தக வலய வலையத்துடன் தொடர்புடைய பங்குதாரர் அமைப்புகளுடன் கலந்துரையாடி பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது

தகவல் சேகரிப்பின் ஊடாக கண்டுபிடிக்கப்பட்ட பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்காக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பான முன்மொழிவுகளை அறிக்கை கொண்டுள்ளது

விபரமான தகவல் திரட்டுகளை உள்ளடக்கிய குறித்த சூழ்நிலை அறிக்கையானது அறிமுகம்இ ஏற்கனவே உள்ள ஆய்வுகள்இ ஆய்வு முறைமை அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் அதனை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் அட்டவணைகள் சொற்பதம் படங்கள் என்பன பிரதான அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன

பியகம மற்றும் பத்துப்பிட்டிவல போன்ற பிரதேசங்களில் சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில் புரியும் தமிழ் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதன் அதனூடாக உள்ளூர் மற்றும் தேசிய சர்வதேச மட்டத்தில் தொழிலாளர்கள் நலன் சார் உரிமைகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொழிலாளர்களுக்கு அவர்களது உரிமை தொழில் சங்கங்களை அமைப்பதனூடாக கூட்டு பேரம் பேசுதல் போன்ற விடயப்பரப்பில் அவர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்குதல் வழங்குதல்

# 01.Introduction அறிமுகம்

### பின்னணி (Background)

இலங்கை அரசானது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக 1978 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுமதி நோக்காக கொண்ட கைத்தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கியது இதற்காக நேரடியான வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வண்ணம் வெளிநாட்டு ஏற்றுமதி வலையங்களை உருவாக்கியது.

திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட சுதந்திர வர்த்தக வலையத்திட்டம் முதல் முதலாக கட்டுநாயக்கவில் 1978 ஆகஸ்ட் மாதம் முதலாவது சுதந்திர வர்த்தக வலையம் உருவாக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து 1982ஆம் ஆண்டு கொக்கலையிலும் பின்னர் பியகமயிலும் 1992-ஆம் ஆண்டு தொடக்கம் சுதந்திர வர்த்தக வலையங்கள் பல உருவாக்கப்பட்டன.ஆயினும் அன்று தொடக்கம் இன்று வரை சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் தொழிலாளிகள் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறார்கள்.

சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில் புரிகின்ற தொழிலாளர்கள் பல்வேறு விதமான பிரச்சனைகளை எதிர் கொள்வது தொடர்பாக வீரசூரியவினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டது மேலும் அவர் கூறுகையில் சுதந்திர வர்த்தக வலையத்தில் வேலை செய்த பெரும்பாலான தமிழ் தொழிலாளர்கள் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து தொழிலுக்கு வந்திருந்தனர் என குறிப்பிடுகின்றார். எனினும் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சுமூகமான சூழ்நிலை காரணமாக வட கிழக்கை சேர்ந்த தொழிலாளர்களும் சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழில் தேடி வந்திருந்தனர் என்பதை சுட்டிக் காட்டுகிறார்.

அதனைத் தொடர்ந்து 2019 இறுதி காலத்திலும் 2020 தை மாதம் காலப்பகுதியிலும் ஆய்வாளர் சுவஸ்திகா அருள்லிங்கம் அவர்களால் ”கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலையத்தில் பணியாற்றும் தமிழ் தொழிலாளர்களினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளின் சுருக்க அறிக்கைஇ” எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சமகால ஆய்வு ஒன்று தயாரிக்கப்பட்டது. குறித்த அறிக்கையில் சுதந்திர வர்த்தக வலையத்தில் கடமை தொழில்புரியும் தமிழ் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் விசேட பிரச்சினைகள் பற்றிய ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### கற்கைக்கான பரப்பும் நோக்கமும் Objective and Scope of the Study

பியகம மற்றும் பத்துப்பிட்டி போன்ற பிரதேசங்களில் சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில் புரியும் தமிழ் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதன் அதனூடாக உள்ளூர் மற்றும் தேசிய சர்வதேச மட்டத்தில் தொழிலாளர்கள் நலன் சார் உரிமைகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொழிலாளர்களுக்கு அவர்களது உரிமை தொழில் சங்கங்களை அமைப்பதனூடாக கூட்டு பேரம் பேசுதல் போன்ற விடயப்பரப்பில் அவர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்குதல் வழங்குதல்

## 02.Context

(This section will include the Policy frame work, Global and Local Context)
திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட சுதந்திர வர்த்தக வலையத்திட்டம் முதல் முதலாக கட்டுநாயக்கவில் 1978 ஆகஸ்ட் மாதம் முதலாவது சுதந்திர வர்த்தக வலையம் உருவாக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து 1982ஆம் ஆண்டு கொக்கலையிலும் பின்னர் பியகமயிலும் 1992-ஆம் ஆண்டு தொடக்கம் சுதந்திர வர்த்தக வலையங்கள் பல உருவாக்கப்பட்டன.

FTZ முதலீடு மேற்கொள்வதற்காக முதலீட்டு சபை BOI அனுமதி வழங்கப்படுவதுடன் முதலீட்டாளர்களுக்கு குறையாத முதல் எழுத்தை முதலீடு செய்ய வேண்டும் என்பதுடன் உற்பத்தி செய்யப்படும் 90 வீதமான உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும்.

குறித்த முதலீட்டினை கொண்டுவருவதற்காக முதல் 5 முதல் 15 வருடங்களுக்கு நூறுவீதம் வரிவிலக்கு வழங்கப்பட்டதுடன் மேலும் 15 வருடங்களுக்கு வரிவிலக்கு சலுகை 2 தொடக்கம் 5 வீதம் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி வெளிநாட்டவருக்கான சம்பளத்திற்காக வரிவிலக்கு வழங்கப்பட்டதுடன் அவர்கள் தமது வருமானத்தை தமது நாட்டுக்கு அனுப்புவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டதுடன் இன்னோரன்ன வரி விலக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.

FTZ உருவாக்கப்பட்டதன் நோக்கங்கலாக :

- அன்னியச் செலாவணியை அதிகரிப்பதற்காக ஏற்றுமதியை அதிகரிக்க கூடிய உற்பத்தியை மேற்கொண்டு புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- படித்தும் வேலை இருப்பதற்கான தொழில் வாய்ப்பினை வழங்கி அவர்களது வருமானத்தை அதிகரிப்பதாக அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- உள்ளூரில் இருக்கக் கூடிய மனித வளத்திற்க்கான தொழில் தேர்ச்சியை வழங்கி அவர்கள் ஊடாக உற்பத்தியை அதிகரித்தல்

- உள்ளூர் தொழிலாளர்களுக்கான புதிய தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளை வெளிநாட்டு நிபுணர்கள் ஊடாக வழங்குதல் போன்றவற்றை குறிப்பிடலாம்

FTZ இல் இயங்கும் கம்பெனிகள் மற்றும் தொழில் முகவர்கள் டீழுஜ இனால் நிர்வகிக்கப் படுவார்கள் என்பதுடன்இ நாட்டின் தொழில் சட்டங்களை மதித்து நடப்பதுடன் சம்பள சபை கட்டளை சட்டம் (Wages Board Ordinance) , தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (Factories Ordinance) இதில் கூறப்படும் தொழிலுக்கான நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும் அத்தோடு தொழில் தொடர்பான பின்வரும் சட்டங்களையும் நடைமுறைபடுத்த வேண்டும்

i. கடைகள் காரியாலய சட்டம் (Shop and Office Employees Act)
ii. சம்பள சபை கட்டளைச் சட்டம் (Wages Board Ordinance )
iii. தொழிற்சங்க கட்டளைச்சட்டம் (Trade Union Ordinance)
iv. மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம் (Maternity Benefits Act)
v. தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (Factories Ordinance)
vi. தொழிலாளர் நட்டஈடு கட்டளைச்சட்டம் (Workman Compensation)
vii. ஊழியர் சேமலாப நிதியம் (Employees Provident Fund Act)
viii. தொழிலாளரை வேலையை முடிவுறுத்தல் தொடர்பான விசேட சட்டம் (Termination of Employees of Workmen (Special Provision) Act
ix. தொழில் பிணக்கு சட்டம் (Industrial Dispute Act)
x. பணிக்கொடை சட்டம் Payment of Gratuity Act

## 03.Methodology முறைமை


தகவல் சேகரிப்பு ஆய்வாளரின் நிர்வாகத்தின் கீழ் சிரமஅபிமானி கேந்திரய நிலையத்தின் திட்ட உதவியாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்ட வினாக்கொத்து ஊடாக பெறப்பட்டது. இதில் பியகம FTZ இல் தொழில் புரியும் 50 தொழிலாளர்களும் வத்துபிட்டிவல FTZ இல் தொழில் புரியும் 50 தொழிலாளிகளும் கலந்துகொண்டு வினாக்களை பூர்த்தி செய்திருந்தனர். குறித்த சூழ்நிலை அறிக்கையானது குறிப்பாக எண்ணிக்கை அடிப்படையிலும் பண்பறி பகுப்பாய்வு (Qantitative and Qualitative) அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக தமிழ் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய சூழ்நிலை அறிக்கை என்பதால் வினாக்கொத்து பூர்த்தி செய்தோர் குறிப்பாக மலையகம் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் 100 பேர் கலந்து கொண்டிருந்தனர்.


மேலும் நிகழ்நிலை செயலி ஊடாக (Zoom) தொழில் சட்டம் மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றிய பயிற்சி செயலமர்வு 08.08 2021 திகதி இடம்பெற்றது இதனூடாக தற்போதைய சூழ்நிலையில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி விபரித்திருந்தனர்.

அத்தோடு தொழிலாளர்கள் நலன்சார் நடவடிக்கைகளில் ஈடுபடும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றவர்களுடன் இருந்தும் தகவல்கள் மேலதிகமான சேகரிக்கப் பட்டது

Table -1 Detail of Data Collection




1.1 வத்துபிட்டிகம




1.2 பியகம

## 04.Constrains and Limitations of Research மட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும்

உலகில் மட்டுமல்ல எமது நாட்டிலும் பரவிய கொவிட்- வ9 தொற்று காரணமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்ட முடக்க நிலை காரணமாகவும் சூழ்நிலையில் ஆய்வினை மேற்கொள்வதில் பின்னடைவை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. திட்டமிட்டபடி இலக்குக் குழு கலந்துரையாடலை நேரடியாக நடத்த முடியாமல் போனது மேலும் வினா கொத்துக்களை நேரடியாக சென்று வழங்குவதிலும் அதனை மீள பெறுவதிலும் எமக்கு சிரமங்கள் ஏற்பட்டன. கூகுள் படிவம் (google form) ஊடாக வினாக்கொத்து வழங்கி பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தொழிலாளிகள் அதனை பூர்த்தி செய்ய தவறிய காரணத்தால் எம்மால் நிகழ்நிலை தகவலையும் பெற முடியாது போய்விட்டது

ஆய்வுக்கான இலக்கு பிரதேசமாக பியகம மற்றும் வத்துபிட்டிவல ஆகிய இரண்டு பகுதிகளை சேர்ந்த சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில்புரியும் தமிழ் தொழிலாளர்கள் மட்டுமே பயன்படுத்த பட்டிருக்கின்றனர்

ஆகவே சேகரிக்கப்பட்ட தகவல்கள் முழுமையாக பியகம மற்றும் வத்துபிட்டிவல குவுணு பிரதேசங்களில் தொழில்புரியும் தமிழ் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் முழுமையான பிரச்சனையை வெளிக்கொணரவிட்டாலும் கூட பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்கள் மொழி ரீதியாகவும் தொழில் தளத்திலும்இ தங்குமிடங்கள்இ இல்லம் தங்குமிடங்களில் அரச அதிகாரிகளின் சேவைகளை நாடிச் செல்லும் போதும் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை பிரதிபலிக்கின்றன .


## 05. Study Findings கற்கையினால் பெறப்பட்ட அடைவுகள்

### தரவுப் பகுப்பாய்வு


பியகம மற்றும் வத்துபிட்டிவல FTZ வலயங்களில் தொழில்புரியும் தலா 50 இ 50 தொழிலாளிகளிடம் வினாக்கொத்த்தினை பூர்த்தி செய்வதன் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

### *1.*தொழிலாளர்களது தனிப்பட்ட விவரங்கள்

இப் தகவல்களின் அடிப்படையில் குறித்த வலயங்களில் தொழில் புரிவோரது மாவட்டங்கள் அவர்களது வயது எல்லைகள் என்பனவற்றை அட்டவணை 2இ 3 ஆகியவை பிரதிபலிக்கின்றன.





2.1 வத்துபிட்டிகம





2.1பியகம

வயது அடிப்படையில் பார்க்கும்போது இரண்டு குவுணு வலயங்களிலும் 21 தொடக்கம் 25 க்கு உட்பட்டோர் அதி கூடுதலாக காணப்படுகின்றனர் வத்துபிட்டிகமவில் 34 பேரும் பியகமயில் 36 பேரும் தொழில் செய்வதுடன் 40 வயதுக்கு மேற்பட்டோர் வத்துபிட்டிவல குவுணு இல் ஒருவரும் இல்லை பியகமயில் ஒருவர் உள்ளார்


இதில் கூடுதலாக நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த தொழிலாளிகள் கூடுதலாக வேலை செய்கின்றார்கள் என்பதை காணக்கூடியதாக உள்ளது மேலும் வயது அடிப்படையில் பார்க்கும்போது 18 வயது தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டோர் தொழில் புரிகின்றனர்





3.1 வத்துபிட்டிகம





3.1. பியகம





இரண்டு வலயங்களிலும் ஆண்களை விட பெண்களே கூடுதலாக தொழில் புரிகின்றனர். தனிநபர் நிலையை பற்றிய விபரம் தொடர்பான வினாக்களுக்கு பதில் அளிக்கும்போதுஇ ஒன்றில் திருமணமானவர் அல்லது திருமணமாகாதவர் என்கின்ற பதிலேயே வழங்கியிருக்கின்றார்கள் இதனூடாக பிரிந்து வாழ்பவர் அல்லது விவாகரத்து பெற்றவர் போன்ற நிலையை அறிவதற்காக வினா எழுப்ப பட்டிருந்த போதிலும் யாரும் விவாகரத்தானவர் என்று பிரிந்து வாழ்பவர் என்று பதில் தரவில்லை.

திருமணமானவர்கள் பிள்ளைகள் உள்ளனரா இல்லையா என்கின்ற வினாவுக்கு






பதிலளிக்கும்போது அவர்களது பிள்ளைகள் தங்களுடன் அல்லது பெற்றோருடன் அல்லது உறவினருடன் வசிப்பதாக கூறி இருக்கின்றார்கள். அவர்களது பிள்ளைகள் பற்றிய விபரத்தை கீழே உள்ள அட்டவணை விபரிக்கின்றது

## *2.*கல்வியின் நிலை

அடுத்ததாக தொழிலாளர்களிடம் அவர்கள் பெற்றுக்கொண்ட முறைசார் முறைசாரா கல்வி பற்றிய வினா எழுப்பப்பட்டது. 99 வீதமானோர் தாம் பாடசாலை கல்வியை பெற்றதாக கூறுகின்றார்கள். இதில் குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதாக கூறி இருக்கின்றார்கள். அவர்கள் வழங்கிய பதில்கள் பின்வருமாறு




4.1 வத்துபிட்டிகம





4.1 பியகம


குடும்பப் பொருளாதாரம் வறுமை மற்றும் யுத்தம் காரணமாக தங்களுடைய கல்வி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தனர்

### 3.சுதந்திர வர்த்தக வலய வேலைவாய்ப்பு

FTZ இல் வேலைவாய்ப்பு தொடர்பாக அறிந்து கொண்ட விதம் தொடர்பான வினாவுக்கு பதில் அளிக்கும் போது தமது நண்பர்கள் ஊடாக தெரிந்து கொண்டதாக வத்துபிட்டிவல இருந்து 30 பேரும் பியகம வில் இருந்து 27 பேரும் தெரிவித்திருந்தனர். சாதாரணமாக விளம்பரம் செய்யப்படும் பத்திரிக்கை ஊடாக அறிந்து தலா மூன்று பேர் மாத்திரமே தொழிலில் இணைந்துள்ளனர். குறிப்பாக வத்துபிட்டிவல முகநூல் ஊடான விளம்பரத்தின் மூலம் தொழிலில் இணைந்தோர் 13 பேர் ஆகும்.




4.1 வத்துபிட்டிகம





4.1 பியகம

தொழில் வாய்ப்பினை பெறும் போது எவ்வித நேர்முகத் தேர்வும் இன்றி வத்துபிட்டிவல 9 பேரும் பியகம வில் 16 பேரும் வேலைக்கு சேர்ந்துள்ளனர்


தொழில் முன்னனுபவம் தொடர்பான வினவியபோது பத்துப் இந்தியாவில் முன் அனுபவத்துடன் 14 பேரும் எவ்வித முன் அனுபவமும் இன்றி 36 பேரும் இணைந்துள்ளனர். பியரகமலைப் பொறுத்தவரை ஒருவரை தவிர மீதி 49 பேரும் எவ்வித முன் அனுபவமும் இன்றி வேலைக்கு இணைந்துள்ளனர்.

செய்யும் தொழிலானது நிரந்தரமானதா தற்காலிகமானது என வினாவுக்கு வத்துபிட்டிவலலில் 35 பேர் நிரந்தரமானது எனவும் 9 பேர் தற்காலிகமானது எனவும் குறிப்பிட்டுள்ளனர். 06 பெயர் எதுவும் குறிப்பிடவில்லை பியகமவை பொறுத்தவரை 2 பேர் நிரந்தரமான தொழிலையும் 22 பேர் தற்காலிகமாக தொழிலையும் புரிவதுடன் இருவர் எவ்விதமான தொழில் என்பதை குறிப்பிடவில்லை..

தொழிலின் தன்மை பற்றிக் குறிப்பிடும்போது வகுப்பில் 40 பேர் இயந்திர இயக்குனர்கள் ஆகவும் பியகம வில் 19 பேர் இயந்திர இயக்குனராகவும் குறிப்பாக மனிதவலு தொழிலாளர்களாக பகுதியில் ரெண்டு பேரும் இயக்கங்கள் 10 பேரும் பதிலளித்துள்ளனர்





5.1 வத்துபிட்டிகம





5.1 பியகம

வினாக்கொத்து களை பூர்த்தி செய்து சர்வதேச அளவில் பெயர் பெற்ற கம்பெனிகளில் செய்வதுடன் அவர்களால் Nike, Puma, Willies, Dorothy, lululemon, சடைய போன்ற பெயர் பெற்ற பிராண்ட் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவை ஐரோப்பாஇ கனடாஇ ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா, இந்தோனேசியா, சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எத்தனை வருடம் தொழில் செய்கிறார்கள் எனும் வினாவுக்கு இரண்டு FTZ இலும் தலா 7 பேர் ஆறு மாதங்களுக்கு குறைவாக வேலை செய்வதாகவும் இரண்டு வருடங்களுக்கு குறைவாக வேலை செய்வோர் வத்துபிட்டிவலவில் 32 பியகமவில் 234 பேர் . 5 வருடங்களுக்கு மேல் வேலை செய்வோரில் வத்துபிட்டிவல இருந்து 3 பேரும் பியகமவில் 2 பேரும் ஆவர்




6.1 வத்துபிட்டிகம





6.1. பியகம


## *4.*தங்குமிட வசதி

தங்குமிட வசதி என்பது வெளியிடங்களில் இருந்து குவுணு வளையங்களுக்கு வருவோருக்கு பெரும் சவாலாகவே உள்ளது. பெரும்பாலானோர் வீடுகளில் அறையை வாடகைக்கு எடுத்து தமது சகாக்களுடன் வசிக்கின்றனர். வாடகைக்கு அறையில் வத்துபிட்டிவல 37 பேரும் பியகம வில் 22 பேரும் வாடகை அறையில் குடி இருப்பதாக கூறினர் குறிப்பாக விடுதி குவாட்டஸ் என்பன மிக அரிதாகவே காணப்படுகின்றது

**4.2 தொழிலாளர்களது தங்குமிட வசதி தொடர்பான விவரத்தை பின்வரும் அட்டவணை காட்டுகிறது**




7.1 வத்துபிட்டிகம




7.1 பியகம

வீட்டு வாடகை மற்றும் செலவுகள் போன்ற விபரத்தை பார்க்கும்போது அவர்கள் பெரும்பாலும் வருமானத்தில் அரைவாசியை வீட்டு வாடகைக்கும் செலவுகளுக்கும் பயன்படுத்துகின்றனர் தமது செலவை குறைக்கும் நோக்கில் தமக்கான உணவைத் தாமே தயாரிப்பதாகவும் 44

பேரும் பிரதமையில் 43 பேரும் குறிப்பிட்டனர் அவர்களுக்கு வேலைத்தளத்தில் மதிய உணவு வழங்கப்படுவதாக மத்திய இருந்து 35 பேரும் பியகம 47 பேரும் குறிப்பிட்டனர்

## 5.செலவுகள்

வீட்டு வாடகை மின்சாரம் உணவு உட்பட மாதாந்த செலவு பற்றி விபரம் இந்த வினாவின் ஊடாக பெறப்பட்டது. சுதந்திர வர்த்தக வலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வீட்டு வாடகை ரூபாய் 8000/- தொடக்கம் 15,000/- வரை உள்ளது . அறை வாடகை ரூபாய் 2500 தொடக்கம் 7500/- இற்கும் இடைப்பட்ட வீச்சில் உள்ளது. தனி நபர்களால் குறிப்பிடப்பட்ட தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது ஒருவருக்கான மாதாந்த செலவு 7,500 ரூபாய் தொடக்கம் 25 , 000/- ரூபாய் வரை காணப்படுகிறது. மேலும் குடும்பத்துடன் வசிக்கும் ஒரு தொழிலாளர் வாழ்க்கை செலவானது ரூபாய் 7500 தொடக்கம் 35,000 வரை காணப்படுகிறது குடும்பத்துடன் வசிக்கும் தொழிலாளர்கள் பெரும்பாலான தொழிலாளர்கள் முப்பதினாயிரம் தொடக்கம் 35,000 வரை வாழ்க்கை செலவினை கொண்டிருந்தனர்.

பெரும்பாலான தொழிலாளர்கள் போதிய குளியலறை வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. சிலவிடங்களில் 10 தொடக்கம் 20 பேர் ஒரு குளியலறையை பகிர வேண்டிய கட்டாயமும் உள்ளது

## 6.சிங்கள மொழியறிவு

சிங்கள மொழி பற்றிய அறிவினை பார்க்கும் போது பெரும்பாலானோர் கொழும்பிற்கு வரும்போது சிங்களமொழி தெரியாமலேயே வந்திருக்கின்றார்கள்.

வினாக்கொத்து கோவையை பூர்த்தி செய்த சகலரும் ஏதோ ஒரு தேவைக்கு அரச அதிகாரிகளை சந்தித்து இருப்பதாக தெரிவித்து இருந்தனர். இவர்களில் பிரதானமாக கிராம நிலதாரிஇ பொது சுகாதார பரிசோதகர்இ சுகாதார வைத்திய அதிகாரிஇ பொலிஸ் உத்தியோகத்தர் இ தொழில் உத்தியோகத்தர் போன்றோரை தொடர்பு கொண்டிருக்கிறார்கள் 2 அதிகாரிகள் மட்டுமே தமிழில் பேசக் கூடியதாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளனர்

BIYAGAMA

| | தெரியும் | தெரியாது |
|---|---|---|
| எழுதுதல் | 01 | 45 |
| பேசுதல் | 17 | 31 |

| | | |
|---|---|---|
| வாசித்தல் | 04 | 40 |

Question 6.1

| | தெரியும் | தெரியாது |
|---|---|---|
| எழுதுதல் | 01 | 39 |
| பேசுதல் | **40** | 05 |
| வாசித்தல் | **32** | 32 |

Question 6.2

WATHUPITIGAMA

| | தெரியும் | தெரியாது |
|---|---|---|
| எழுதுதல் | 05 | 41 |
| பேசுதல் | 30 | 18 |
| வாசித்தல் | 04 | 26 |

Question 6.1

| | தெரியும் | தெரியாது |
|---|---|---|
| எழுதுதல் | 03 | 40 |
| பேசுதல் | **36** | 11 |
| வாசித்தல் | **04** | 25 |

Question 6.2

### 7.தொழில் தொடர்பாக

தொழில் ஒப்பந்தம் தொடர்பான வினாவுக்கு வத்துபிட்டிவல இருந்து 38 பேர் ஆம் எனவும் ஒருவர் இல்லை எனவும் பத்து பேர் எவ்விதப் பதிலும் அளிக்கவில்லை அதேபோன்று பியகம வில் 37 பேரும் ஒப்பந்தம் உள்ளதாகவும் 13 பேர் ஒப்பந்தம் இல்லை எனவும் பதிலளித்துள்ளனர்

தொழில் சட்டப்படி ச வேலை நேரம் பகல் வேளை இரவு வேலை என இரண்டையும் உள்ளடக்கம் சாதாரணமாக வேலை நேரம் என்பது திங்கள் தொடக்கம் வெள்ளி வரையான ஐந்து நாட்கள் ஒன்பது மணித்தியால என்பதும் அதில் ஒரு மணித்தியாலம் உணவுக்கும் ஏனைய இயற்கை உபாதைகளுக்கு பயன்படுத்த முடியும் சனிக்கிழமை 6 மணித்தியாலம் உணவுக்கும் ஓய்வுக்கும் பயன்படுத்த முடியும்.. ஆயில் சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழில் புரிவோர் அவர்களும் ஓய்வு நேரங்களிலும் இயந்திரம் போன்று உழைக்க வேண்டும்

### 8.மனிதவலு தொழில் தொடர்பாக

மனிதவலு தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நிரந்தர தொழிலாளர்களும் பார்க்க அவர்களது நாளாந்த கூலி சற்று கூடுதலாக இருந்த போதிலும் கூட அவர்களுக்கான தொழில் பாதுகாப்பு மற்றும் எனைய தொழிலாளர் நலன் சார் நன்மைகள் எதுவும் இல்லை அதிலும் குறிப்பாக கொவிட் 19 தாக்கத்திற்கு உள்ளாகி முழு நாடும் முடங்கி கொண்டிருக்கின்ற இந்த காலப்பகுதியில் அவர்கள் அநேகமானவர்கள் தோழில் இல்லாதவர்களாகவே காணப்படுகிறார்கள். சம்பளத்துடன் கூடிய லீவு செய்வதற்கான லீவு என்பதால் இவர்களுக்கு குறித்து இல்லை

தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் உணவு பற்றி வினவப்பட்ட போது அநேகமானோர் தமக்கு வழங்கப்படும் உணவும் தரமானது அல்ல என்பதை பதிவு செய்திருக்கிறார்கள்

## 06.Recommendations and conclusions

(This chapter will show the implications of the facts and figures from the study as well as how these findings fit in the holistic context of Free Trade Zone and the marginalized female workers and enhancement of their rights)

Recommendations: The consultant will suggest the way forward basing on the findings and the context in which the sub project is to be implemented.

பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்கள் உடன் ஒப்பிடும் போது குறைவான தரத்திலான தொழில்களையே புரிகின்றனர் பிரதானமாக ஆண்கள் மேற்பார்வையாளர் தொழில்நுட்ப அதிகாரிகள் போன்ற தரத்திலான தொழில் புரிகிறார்கள் இதற்கு இலங்கையில் உள்ள ஆணாதிக்க சமூக கட்டமைப்பும் காரணமாக அமையலாம் சமூக கலாசாரம் இன் பிரகாரம் பெண்கள் தேர்ச்சி அன்றாட தொழில்களை மேற்கொள்ளும் ஆண்கள் தொழில்நுட்பத் தேர்ச்சி உள்ள தொழில்கள் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் போன்ற பணிகளிலும் அமர்த்தப்பட்டுள்ளனர்

இதில் சட்டப்படி வேலை நேரம் என்பது பகல் வேளை இரவு வேலை என்னும் இரண்டையும் உள்ளடக்கும் சாதாரணமாக வேலை நேரம் என்பது இன்று தொடக்கம் வெள்ளி வரையான நாட்களில் ஒரு நாளைக்கு ஒன்பது மணித்தியால என்பதும் அது ஒரு மணித்தியாலம் உணவுக்கும் இனிய இயற்கை உபாதை கழிக்கும் பயன்படுத்தமுடியும் சனிக்கிழமைகளில் 6 மணித்தியாலம் அதில் அரை மணித்தியாலம் உணவுக்கு பயன்படுத்தப்படும் ஆனால் சுதந்திர வர்த்தக வலயத்தில் இலக்கை அடைவதற்காக நீண்ட நேரம் தொழில் செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கும் ஆளாகின்றனர்

மனித வலு தொழிலாளர்களது தொழிலாளர்களது தொழில் நிச்சயம் வைத்ததாகவும் அவர் அவர்கள் சுரண்டலுக்கு ஆளாகி கூடியவர்களாகவும் சுவையான குடும்பத்தில் அவசரம் நிகழ்வு இருந்தால் கூட லீவு எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

தொழிற்சங்கங்கள் காணப்படாமையால் அவர்களது உரிமையை தரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சங்கங்கள் கூட்டாக தொழில் தரப்பினரிடம் கேள்வி கேட்பதற்கும் கூட்டான பேரம் பேசுவதற்கான வாய்ப்பு வாய்ப்பும் அருகியே காணப்படுகின்றது

சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழில் புரியும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தமக்கு தொழில்சாலையில் வழங்கப்படும் தொழில் ஒப்பந்தம் சம்பள செட்டை தொழிற்பயிற்சி விளக்கம் என்பன சிங்களத்தில் வழங்கப்படுவதால் அதனை நம்மால் புரிந்து கொள்ள முடியாது எனக் கூறினர்

அரசு சேவைகளை பெற்றுக் கொள்வதிலும் அரசு உத்தியோகத்தர்கள் சிங்கள மட்டும் பேசுவதாலும் அரச உத்தியோகத்தர்கள் அது சேவைகளை பெறுவதில் சிரமங்கள் உள்ளன

தொழிலாளர்கள் பெறும் வருமானத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட வருமானம் சாப்பாட்டுக்கு தங்குமிடத்திற்கு செலவாகின்றது

# 07.References

# 08.Appendices

| | | |
|---|---|---|
| Appendices | I : | Terms of Reference |
| Appendices | II: | List of Research Activities |
| Appendices | III: | Background of Free Trade Zone |
| Appendices | IV: | Report of the Group Discussion |
| Appendices | V: | List of Stakeholders |
| Appendices | VI: | Interview Guide lines |
| Appendices | VII: | List of Interviews |
| Appendices | VIII: | Selection Criteria |